DINATHANTHI 24 SEP 2008



### நஞ்சன்கூடில்

# மக்கள் பிரதிநிதிகளுக்கான சிறப்பு முகாம்

மைசூர், செப்.24–

எப்போதும் மக்கள் மத்தியில் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகளான மந்திரிகள், எம்.பி.க்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களுக்கான சிந்தனை என்ற சிறப்பு முகாம் நஞ்சன்கூடு தாலுகாவில் உள்ள சுத்தூரில் நேற்று தொடங்கியது. ஜே.எஸ்.எஸ். மடத்தின் சார்பில் நடக்கும் இந்த முகாம் 3 நாட்கள் நடைபெறுகிறது. முகாமை மடாதிபதி சத்குரு ஜக்கி வாசுதேவ் தொடங்கி வைத்தார். முகாமுக்கு சிவ ராத்திரி தேசிகேந்திர சுவாமிஜி தலைமை தாங்கினார்.

முதல்நாள் முகாமில், உக்ரப்பா எம்.எல்.சி., பிஜாப்பூரில் உள்ள ஞானயோக ஆசிரம சித்தேஷ்வர சுவாமி, முதல்வரின் நாடாளுமன்ற செயலாளர் ராமதாஸ், எம்.எல்.ஏ.க்கள் சி.டி.ரவி, சா.ர.மகேஷ், எச்.எஸ்.மகாதேவ பிரசாத், நரேந்திரபாபு, முக்கிய மந்திரி சந்துரு, தோண்டதாரிய எம்.எல்.சி. உள்பட பலர் கலந்து கொண்டனர்.

3 நாட்கள் நடக்கும் இந்த முகாமில், ஏராளமான எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம்.எல்.சி.க்கள் கலந்துகொள்வதற்காக தங்களது பெயர்களை பதிவு செய்து உள்ளனர்.